விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 18 திங்கட்கிழமை (04.12.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 340

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# புலிகளுடன் தொடர்பு கொள்ள நோர்வே தரப்பினருக்கு தடை

## இலங்கை அரசு விதித்தது

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான தொடர்புகளை மேற்கொள்ள நோர்வேத் தரப்பினருக்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது. தற்கொலைத் தாக்குதல் முயற்சிகளை அடுத்து அத்தகைய நடவடிக்கைகளில் விடுதலைப்புலிகள் ஈடுபடுவதை தடுப்பதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹன்ன தெரிவித்தார்.

இத் தடையுத்தரவு குறித்து நோர்வே தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தடையுத்தரவையடுத்து நோர்வே சிறப்புத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரின் வன்னிக்கான விஜயம் நிறுத்தப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பயணத்தை இரத்து செய்த கிளின்டன்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதுவரும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான பில் கிளின்டன் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாடுகளின் அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிடும் தனது பயணத் திட்டத்தில் இலங்கையைத் தவிர்த்துள்ளார்.

இலங்கையில் தற்போது நிலவும் நிலைவரங்கள் அவருக்கு ஏற்படுத்திய கவலையும் அதிருப்தியே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளின்டனின் சிறப்புத் தூதுவர் பதவிக்காலம் இந்த மாதம் டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிபடைகிறது. அதற்கு முன்னதாக இந்தியா, இந்தோனேசியா ,தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு அவர் சுற்றுப் பயணம் செய்தார்.

இலங்கையில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுவதாக அரசு மீது குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளதால் ஆழிப்பேரலை மறு நிர்மாணங்களையும் நிவாரணப் பணிகளையும் அரசு சரிவர மேற்கொள்ளாததாலும் கிளின்டன் தமது பயணத்திட்டத்தில் இலங்கையைத் தவிர்த்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## கஜுவத்தை ராணுவ முகாம் மீது புலிகள் மோட்டார் த்தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான கஜுவத்தை இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் மோட்டார் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக படைத் தரப்பினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவும் ,நேற்றும் இத் தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கஜுவத்தை இராணுவமுகாமைச் சுற்றியுள்ள காவல் அரண்களில் கடமையாற்றும் இராணுவத்தினரை இலக்குவைத்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவு அமைச்சர் ஜனவரியில் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் இலங்கை வரவுள்ளார். இந்தியாவில் நடைபெற்ற சார்க் மாநாட்டின் போது விடுக்கப்பட்ட அழைப்பின் நிமிர்த்தம் அவரது கொழும்புப் பயணம் அமைகிறது. அவர் தனது வருகையின் போது இலங்கை இனப் பிரச்சினை குறித்து உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அமைச்சரின் வருகைக்கு முன் பாக இனப் பிரச்சினைக்கு தீர்வு காணக் கூடிய விபரமான தீர்வுத் திட்டங்களை அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு தயாரித்துவிடும் என

## புதிய அவசரகால சட்ட விதிகளை

# கஜுவத்தை ராணுவ முகாம் மீது புலிகள் மோட்டார் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பிரதேசமான கஜுவத்தை இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் மோட்டார் குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக படைத் தரப்பினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவும் ,நேற்றும் இத் தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. கஜுவத்தை இராணுவமுகாமைச் சுற்றியுள்ள காவல் அரண்களில் கடமையாற்றும் இராணுவத்தினரை இலக்குவைத்து (04 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய அவசரகால சட்ட விதிகளை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

புதிய அவசரகால சட்ட விதிகளை அரசாங்கம் அடுத்த வாரம் அறிமுகப்படுத்தலாம் என நம்பப்படுகின்றது. அதேவேளை பயங்கரவாத தடைசட்டத்தை மீள அமுல்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

அதிகரித்து வரும் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்கும் வகையிலேயே இச்சட்டங்களை மீள அமுல் செய்ய அரசாங்கம் உத்தேசித்து வருவதாகவும் ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. புலிகளுக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் (04 ஆம் பக்கம் பார்க்க)

# அதிகளவு உணவுப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பு

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஏ-9 வீதி திறந்திருந்த காலத்தில் அனுப்பப்பட்ட உணவுப் பொருள்களை விட அதிகளவான உணவுப் பொருள் கப்பல் மூலம் யாழ். குடாநாட்டிற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுவரை யாழ்ப்பாணத்திற்கு 37 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள் அனுப்பப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி. திவாரட்ண தெரிவித்துள்ளார். இதனால் யாழ்ப்பாணத்தில் உணவுப்பற்றாக்குறை இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கான அதிகாரிகளின் பற்றாக்குறை காணப்படுவதாக அவர் கூறியுள்ளார். 6 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை ஏற்றிய 2 கப்பல்கள் அடுத்த வாரம் அனுப்பப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-7)

# இந்திய வெளியுறவு அமைச்சர் ஜனவரியில் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் இலங்கை வரவுள்ளார். இந்தியாவில் நடைபெற்ற சார்க் மாநாட்டின் போது விடுக்கப்பட்ட அழைப்பின் நிமிர்த்தம் அவரது கொழும்புப் பயணம் அமைகிறது. அவர் தனது வருகையின் போது இலங்கை இனப் பிரச்சினை குறித்து உயர்மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அமைச்சரின் வருகைக்கு முன் பாக இனப் பிரச்சினைக்கு தீர்வு காணக் கூடிய விபரமான தீர்வுத் திட்டங்களை அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு தயாரித்துவிடும் என ஜனாதிபதி மகிந்த இந்திய அரசாங்கத்துக்கு கூறியுள்ளார். இலங்கை வரும் பிரணாப் முகர்ஜி இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைபாட்டை தெரிவிப்பார். (ச-5)

# நாட்டை இரண்டாக பிரிக்க சர்வதேச சமூகம் தீவிர முயற்சி

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் எச்சரிக்கை

நாட்டை இரண்டாக பிளவுபடுத்தும் சர்வதேச முயற்சிகள் காணப்படுவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. போர் நிறுத்த உடன்படிக்கையைக் கடைப்பிடித்தல், அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், ஏ-9 வீதியைத் திறத்தல் போன்ற சர்வதேச அழுத்தங்கள் மூலம் இது தெளிவாக தெரிவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இந்தியா ஊடாக இதனை மேற்கொள்ள சர்வதேச சமூகம் முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் குணதாச அமரசேகர இந்தக் கருத்துக்களை கூறினார். (ச-7)

# காங்கேசன்துறைமுக அபிவிருத்திக்கு இந்திய அரசாங்கம் 230 கோடி ரூபா உதவி

இந்திய அரசின் உதவியுடன் ஏறக்குறைய 236 கோடி ரூபா செலவில் காங்கேசன்துறை துறைமுகத்தை சீரமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

துறைமுக புனரமைப்புக்கு இந்திய அரசு 230 கோடி ரூபா வழங்க முன்வந்துள்ளது. அரசு ஆறு கோடி ரூபாயை செலவிடுகிறது.

துறைமுக அபிவிருத்திப் பணிகள் மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளன. இந்தப் பணிகள் எதிர்வரும் 2008 ஆம் ஆண்டளவில் நிறைவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்திற்கான உணவுப் பொருள்கள் கப்பல் மூலம் எடுத்து வரப்படுவதால் காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# போரின் மூலம் தீர்வென்றால் அதற்கும் புலிகள் தயார்!

## எழிலன் தெரிவிப்பு

(கொழும்பு)

போரின் மூலமே தீர்வென அரசு கூறினால் அதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம் என விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றின் வார வெளியீட்டிற்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவரது செவ்வி வருமாறு;

*கேள்வி:-* சர்வதேச அனுசரணையுடன் சர்வதேசம் ,இலங்கை அரசும் விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்தால் பேச்சிற்கு செல்வீர்களா?

*பதில்:-* எமது தலைவர் இலங்கை அரசின் முழுமையான பக்கங்களையும் பார்த்து அவர்களினால் எந்த மாற்றமும் ஏற்படுத்தப்படாது என்பதன் பின்பு நாங்கள் தனியரசு நிறுவதை தவிர வேறு வழியில்லை என்பதை தெரியப்படுத்தி இருக்கிறார். எனவே அந்த தனியரசு என்பதற்குள் சர்வதேச ரீதியாக ஏதாவது மாற்றங்கள் ஏற்படுத்தப்படுமானால் அவ்வாறான பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் ஆலோசிக்கத் தயாராக இருக்கிறார்கள். இதன் பின்பு வேறொரு நடவடிக்கை தொடர்பாக பேசுவது உண்மையிலே இயலாத காரியமாக இருக்கும்.

*கேள்வி:-* பேச்சுவார்த்தைகள் இல்லையானால் அடுத்த கட்டமாக விடுதலைப் புலிகள் யுத்தத்திற்கு தயாராகி விட்டார்களா?

*பதில்:-* விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை என்றுமே யுத்தத்திற்கு தயாரான நிலைப்பாட்டில் தான் இருக்கிறார்கள். போர் நடைபெறுகின்ற பொழுது சமாதானத்தைப் பற்றி யோசி; சமாதானம் நடைபெறுகின்ற பொழுது போரைப் பற்றி யோசி என்று சொல்லுவார்கள். இதே போன்ற எண்ணக் கருவோடு எமது தலைவர் விடுதலைப் போராட்டத்தை வழி நடத்தி வருகிறார். அந்த வழி நடத்தலின்படி நாங்கள் எப்போதும் போரிற்கு தயாராகவே இருக்கிறோம்.

ஏனென்றால் நாங்கள் ஒரு விடுதலைப் போராட்டத்தை நடத்துபவர்கள். எப்போதும் போருக்கு தயாராகவே இருக்க வேண்டும். நாங்கள் பல விடுதலைப் போராட்ட வரலாறுகளைபார்த்திருக்கின்றோம். பேச்சுவார்த்தையின் பின் போருக்கு தயாராக இல்லாததால் எப்படி அழிந்து போனார்கள் என்பதை பார்த்திருக்கிறோம். அவை பாடமாக உள்ளன.

இந் நிலையில் நாங்கள் எங்களை எப்போதும் போருக்கு தயார்படுத்தியே வைத்துள்ளோம். போரினால் தீர்வு என்றால் போரில் ஈடுபடவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்.

*கேள்வி:-* அரசு தாக்குதல்களை நடத்துகின்றபோது நீங்கள் உங்களது முப்படைகளின் பலத்தையும் பயன்படுத்துவீர்களா?

*பதில்:-* யுத்தநிறுத்த உடன்படிக்கையை நாங்கள் கடந்த காலத்தில் மதித்து அதன்படி கடந்த காலங்களில் நடந்து கொண்டோம். ஆனால் அரசு தொடர்ந்து மீறி வருகின்றது இந்த நிலையில் எங்களது நிலைப்பாட்டில் ஏற்படுகின்ற மாற்றம் நாங்கள் எல்லா வகையிலும் தாக்குதலை நடத்த வழிசமைக்கும். அது தேவையாகவும் இருக்கிறது. எங்களுடைய அனைத்துப் படைப் பிரிவுகளும் தாக்குதல்களை நடத்தும்.

*கேள்வி:-* வாகரை நிலைமைகள் பற்றி கூறமுடியுமா?

*பதில்:-* வாகரையில் தொடர்ந்து உணவு நெருக்கடி இருந்து வருகிறது. அதற்கு அப்பால் அந்தப் பகுதியில் உள்ள மக்களை நோக்கி படையினர் தொடர்ச்சியாக தாக்குதலைக்களையும் நடத்தி வருகின்றனர்.

இந்த மக்களுடைய அவலம் தொடர்பாக அரச ,அரச சார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருகின்ற போதும் மாற்றங்கள் எவையும் ஏற்படுத்தப்பட வில்லை அரசு அந்த மக்களை பட்டினி போட்டு தொடர்ந்து தாக்குதலை நடத்தி அந்த மக்களை அழித்தொழிப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதுவரை ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் மட்டுமே வந்துள்ளன. இவை யானைப் பசிக்கு சோழப்பொரி போன்றது தான் என்றார்.



*கேள்வி:-* வாகரைப் பகுதி மக்களையும் குடாநாட்டு மக்களையும் பட்டினி போடுவதுதான் அரசின் நோக்கமா? அல்லது வேறு நோக்கங்களும் உள்ளதா?

*பதில்:-* யுத்தத்தில் உணவும் மிக முக்கியமானது அந்த உணவு. இல்லாவிட்டால் எந்த ஒரு நடவடிக்கையையும் செய்ய முடியாது பிரச்சினை வரும். அது யாராக இருந்தாலும் நிலைமை அதுதான். ஆனால் தமிழீழத்தின் நிலைமை வேறு. கடந்த காலங்களில் பொருளாதார தடை விதிக்கப்பட்ட போதிலும் எமது மக்கள் மனம் சோராமல் விடுதலைப் போராட்டதில் பற்றுறுதியுடன் செயற்பட்டார்கள் என்றார் எழிலன். (எ-5)

# ஒளி விழா

(பொன்னாலை)

தென்னிந்திய திருச்சபை யாழ். திருமண்டலத்தின் அராலி மேற்கு சமாதானக் கோட்டை திருச்சபையின் ஒளி விழா நிகழ்வுகள் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சமாதானக் கோட்டை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் சமாதானக் கோட்டை முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வுகள் மற்றும் கவிதை, பேச்சு ஆகியனவும் இடம் பெறவுள்ளன. (ச-49)

# சமய தீட்சை

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை-தெக்ககணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அடியார்களுக்கு சமயதீட்சை வழங்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து கண்ணகி அம்பாளுக்கு பௌர்ணமி கால சகஸ்ரநாம அர்ச்சனை நடைபெறவுள்ளது. (ச-49)

# சதொச நிறுவனம் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு பொருட்கள்

(கொழும்பு)

தென்னிந்தியாவில் இருந்து அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்வதற்காக சதொச நிறுவனம் கொள்வனவுக் கட்டளை ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.கே.ரட்ணநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு கப்பல் மூலம் இப் பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்படும் எனத் தெரிவிக்கப் பட்டது. (ச)

# நகை அடகு வைப்போர் நாளுக்குநாள் அதிகரிப்பு

(பொன்னாலை)

யாழ்.குடாநாட்டு வங்கிகளில் நகை அடகு வைப்போர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக வங்கி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்டு 4 மாதங்கள் கடந்து விட்ட நிலையில் தொழில்துறை ஏதுமின்றித் தவிக்கும் மத்தியதர மற்றும் சாதாரண தர வர்க்கத்தினர் தம்மிடமுள்ள நகைகளை அடகு வைத்தே ஜீவனோபாயம் நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

இதனையடுத்தே நகைகளை அடகு வைக்க வரும் மக்கள் தொகை வங்கிகளில் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டட வேலைகளை மேற்கொண்டு வந்த தொழிலாளர்கள் மூலப் பொருள்கள் இன்மையாலும், கடற்தொழிலை மேற் கொண்டு வந்தோர் கடல் வலயச் சட்டங்களாலும் தமது தொழில் துறையை இழந் துள்ளனர். இதே போன்று அனைத்துத் தரப்பினரும் நிலைவும் அசாதாரண நிலைமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-49)

# சிறுவர் பாதுகாப்பில் மட்டுமன்றி ஏனைய விடயங்களிலும் கவனம் தேவை

## ஐ.நா. பிரதிநிதி வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் படைகளில் சிறார் சேர்க்கப்படுவதை மட்டுமே கருத்தில் கொள்ளாமல் ஏனைய மனிதாபிமான விடயங்கள் குறித்தும் பரவலான பார்வையை ஐக்கிய நாடுகள் சபையின் கவனம் செலுத்த வேண்டும் என்று அதன் சிறப்பு தூதுவர் அலென் றொக் தெரிவித்துள்ளார்.

படைகளில் சிறார் சேர்க்கப்படுவதுடன், சிறார் கொல்லப்படுவது, அவர்களுக்கான மனித உரிமைகள் மறுக்கப்படுவது போன்றவை குறித்து ஐ.நா கவனம் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

இலங்கைக்கு கடந்த மாதம் வருகை மேற் கொண்ட றொக் பாதுகாப்புப் படையின் பாதுகாப்பில் உள்ள பகுதிகளில் குழந்தைகள், சிறார்களின் நிலைமை குறித்து பார்வையிட்டார்.

நேரடி சாட்சியங்களும் கடத்தப்பட்ட சிறார்களின் குடும்பங்கள் தந்த தகவல்களுக்கு தமது ஆய்வுக்கு ஆதாரமாக உள்ளதையும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து நிலைகளிலும் ஆயுதப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சமனான கவனிப்பும், பராமரிப்பும் அளிக்க வேண்டும். சிறார்கள் படையில் சேர்க்கப்படுவது தவிர சிறார்களைக் கொல்வது, பாலியல் வன்முறைக்குட்படுத்துவது, கடத்தப்படுவது மற்றும் பாடசாலைகள், மருத்துவமனைகளுக்கு எதிரான தாக்குதல்கள், குழந்தைகளுக்கு மனிதாபிமான உரிமைகள் மறுக்கப்படுவது என ஏனைய அனைத்து வன்முறைகள் பற்றியும் பாதுகாப்பு மன்றம் கவனத்தில் கொள்ள வேண்டும் என அவர் அறிக்கையில் கூறியுள்ளார். (ச-5)

# விஷேட செயற்திட்டத்தின் கீழ் ஓ.எல். மாணவர்களுக்கு அ.அட்டை

எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு விஷேட செயல்திட்டத்தின் கீழ் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஆட்பதிவுகள் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை பரீட்சை மண்டபத்தில் சமர்பிப்பது பரீட்சைத்திணைக்களத்தினால் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தேசிய அடையாள அட்டையை இதுவரை பெற்றுக் கொள்ளாத மாணவர்களுக்கு அடையாள அட்டையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரீட்சை திணைக்களம் ஆட்பதிவுத் திணைக்களத்தை கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்விஷேட செயல் திட்டத்தின் மூலம் அடையாள அட்டையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் ஏ.ஜீ.தர்மதா தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களை தபாலில் இடாமல் ஆட்பதிவுத் திணைக்களத்தின் தலைமை காரியாலயத்தில் நேரடியாக ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக தோற்றும் இதுவரை அடையாள அட்டையை பெறாதவர்கள் கல்வி கற்ற பாடசாலை அதிபரின் ஒப்பந்தத்துடன் விண்ணப்பப்படிவத்தை சமர்பிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-5)

# போதனாசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

போதனா ஆசிரியர் பதவி வெற்றிடங்களுக்கு தகைமையுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் தமிழ், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் அல்லது தொழில் நுட்பப் பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருப்பதுடன் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒருவருடத்திற்குக் குறையாத தகவல் தொழில் நுட்பம் தொடர்பான முழுநேர டிப்ளோமா பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் அல்லது;

அதற்கு சமமான தகைமை கொண்டிருப்பதுடன் அத்துறையில் மூன்று வருடத்திற்குக்குறையாத அனுபவத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகார சபையின் தகவல் தொழில் நுட்பத்துறையில் பயிற்சி நெறிகளை நடத்துவதற்கு தெரிவு செய்யப்படுபவர் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படவுள்ளார்.

கல்வித் தகைமை, தொழில் தகைமை, மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகளுடன் உறவினர் அல்லாத இருவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள் அடங்கலாக தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர் ,இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை, 4 ஆம் மாடி, நிபுண தாபிய ,354 /2 எல்வட்டிகல மாவத்தை, கொழும்பு 05 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். (ச)

மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று

-திருக்குறள்

வலம்புரி

## சிக்கின்குனியாவைக் கட்டுப்படுத்த அவசரகாலப்பணி முன்னெடுக்க வேண்டும்

யாழ்.குடாநாட்டில் சிக்குன்குனியா காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருகின்றது. எவரையும் விட்டுவைக்காதது போல் வேகம் எடுத்துள்ள சிக்கன்குனியாவை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை.

ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் யாழ். குடாநாட்டு மக்களின் போசாக்குநிலை மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது.

எதையுமே வேண்டமுடியாது என்ற நிலையில் சிக்கின்குனியாவின் தாக்கம் குடாநாட்டு மக்களை வலுவிழக்க செய்து விட்டது.

அரிசி,மா, சீனி ஆகிய உணவுப்பொருள்களை பங்கீட்டு அட்டைக்கு பெறவேண்டிய யாழ்.குடாநாட்டில் காய்ச்சல் மட்டும் மிக மலிவாக எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது.

பஞ்சம்,பட்டினி போன்ற கோரப்பிடிக்குள் சிக்குண்டு தவிக்கும் மக்களை காய்ச்சலும் வாட்டி எடுத்து விட்டால் மனித வாழ்வே வெறுப்புக்குரியதாகிப் போகும்.

எனவே யாழ்.குடாநாட்டில் வேகமாகப் பரவி வரும் காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு உடனடியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது மிகவும் அவசியமானதாகும்.

இதுபற்றி இப்பகுதியில் பல தடவைகள் எழுதியாயிற்று. சிக்கன்குனியா பற்றிய அறிக்கைகள் செய்திதாள் ஊடகங்களில் வெளிவருகின்ற அதேநேரம், அதனை இல்லாது ஒழிப்பதற்கான செயல்முறைப் பணிகளை முனைப்புடன் முன்னெடுக்க வேண்டும்.

எதிர்வரும் 11ந் திகதி நாடு பூராகவும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை ஆரம்பமாகின்றது. இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் குறித்த பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் சிக்கின் குனியா காய்ச்சலுக்கு ஆளாகியிருக்கும் போது, பரீட்சைக்கு தோற்றுவது - பரீட்சையை எதிர்கொள்வது என்பன சாத்தியமானவை அல்ல.

ஆக , க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களின் உடல் நிலையில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அத்துடன் சிக்கின்குனியா காய்ச்சல் ஒருமுறை வந்தால் உடம்பு நோய் எதிர்ப்பு சக்தியை பெற்று விடும் என்றால் அதுதான் இல்லை.

திரும்பத் திரும்ப காய்ச்சல் தாக்கும் பரிதாப நிலையிருக்கிறது. இது மிகவும் கொடுமையானது என்பதுடன் திரும்பத் திரும்ப காய்ச்சலுக்கு ஆளாகும் போது மரணம் சம்பவிக்கும் பரிதாபமும் ஏற்படலாம்.

எனவே சிக்கின்குனியா காய்ச்சலை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அவசரகால நிலையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதற்கு யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

அதேநேரம் சிக்கின்குனியாவைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மக்களின் போசாக்குநிலை பேணப்படவேண்டும்.

இதற்காக பாதுகாப்பு படையினர், மீனவர்களை கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் கடல் உணவை மக்கள் நுகர முடியும்.

# அரசின் ஆயுதக் கொள்வனவில் மில்லியன் கணக்கில் ஊழல்

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்திற்கான ஆயுதக் கொள்வனவில் பெரும் ஊழல் நடந்திருப்பதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது.

தற்போது விமானப்படைக்கு பல மில்லியன் ரூபாய் அல்லது டொலரில் நான்கு மிக் -27 ரக விமானங்கள் வேறு ஏழு விமானங்கள் வாங்கியது தொடர்பாக பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

விமானப்படை சார்பில் அரசுக்கும் உக்ரேய்ன் நாட்டுக்கு சொந்தமான உக்ரின் மார்ஷ் என்ற நிறுவனத்திற்கு மிடையில் நடைபெற்ற கொள்வனவு அரசாங்கங்களுக்கு இடையிலான ஒப்பந்தமாக நடைபெறும்.

வழக்கமாக இத்தகைய பெரும் கொள்வனவுகளைச் செய்வதற்கு முன்னதாக பல தரப்பில் இருந்தும் விலை விசாரிக்கப்படும். மிகக்குறைவான அதே சமயத்தில் தரமாகவும் விலை குறிப்பிடும் ஒப்பந்தங்களே ஏற்றுக்கொள்ளப்படும்.இது உலக அளவில் உள்ள நடைமுறை.

ஆனால் இடையில் கடந்த யூலை 26 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் பிரித்தானியாவில் பதிவு செய்யப்பட்ட Bellimissa Holdings Limited என்ற வெளி நிறுவனம் ஊடாக செய்யப்பட்டது. நான்கு மிக் 27 ரக விமானங்களுக்கான விலையும் ஏனைய கட்டணங்களும் நேரடியாக இந்த நிறுவனத்திற்கு வழங்கப்படும் என அந்த ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் தேவையான அனைத்து ஆயுதங்களையும் சேவைகளையும் கவனித்துக் கொள்வதற்கும் கொள்வனவு செய்வதற்குமான பொறுப்புக்களை முழுக்கமுழுக்க அரசாங்கத்துக்குச் சொந்தமான Lanka Logistics and Technologies Limited என்ற நிறுவனம் கடந்த யூலை மாதம் 27 ஆம் திகதி ஏற்றுக் கொள்வதற்கு ஒரு நாள் முன்பே இந்த ஒப்பந்தம் கை யெழுத்தாகியுள்ளதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி 1.75 மில்லியன் யூஎஸ் டொலருக்கு இந்த விமானம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாம் தடவையாக 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி 1.6 மில்லியன் யுஎஸ் டொலருக்கு இதே விமானம் வாங்கப்பட்டுள்ளது.

அண்மையில் 2 ,462,000 டொலருக்கு இந்த விமானம் வாங்கப்பட்டுள்ளது என அவ் ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

(எ-1)

# குற்றஞ் சாட்டப்பட்ட இராணுவ மேஜரின் சகோதரர் தண்ணீரில் குதித்து தற்கொலை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு முக்கிய இராணுவத் தகவல்களை விற்று பெரும் தொகை பணம் பெற்றதாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் இராணுவ மேஜரின் சகோதரர் தற்கொலை செய்துள்ளார்.

சகோர்தரர் தந்த பணம் விடுதலைப்புலிகளிடமிருந்து பெற்றது என்பதை அறிந்ததாலேயே அவர் தற்கொலை செய்ததாக தெரிவிக்கப்பட்டது. டி.எம் தர்மதிலக (வயது-45) என்ற பாடசாலை ஆசிரியர் தற்கொலை செய்துள்ளார் எனக் கூறப்படுகிறது..

இவர் தமது குடும்பத்துடன் பிலியந்தல என்ற இடத்துக்கு விடுமுறைக்குச் சென்றிருக்கிறார். அங்கு பொல்கொட வாவியில் படகுப் பயணம் சென்றபோது திடீரென தண்ணீரில் குதித்துத் தற்கொலை செய்துள்ளதாகக் கூறப் படுகிறது.

குற்றப் புலனாய்வுத் துறையினரது விசாரணைக்காக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் தனது சகோதரரை தர்மதிலக சந்தித்துள்ளார். அப்போது அவர் தனக்கு கடனாகத்தந்த பணம் விடுதலைப்புலிகளிடமிருந்து பெற்றது என அறிந்துள்ளார். இதனையடுத்து அவர் தற்கொலை செய்துள்ளார் என தெரிவிக்கப்பட்டது.

குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட மூன்றாம் நிலை இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க நடவடிக்கைகள் உட்பட பல தகவல்களை அவர் விடுதலைப் புலிகளுக்கு விற்றுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

(ச-5)

# ஜனாதிபதி மகிந்தவுடனான சந்திப்பை படமெடுக்க விடாத இந்தியப் பிரதமர்

(கொழும்பு)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா சென்றிருந்த போது அவருடன் படமெடுக்க இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மறுப்புத் தெரிவித்ததாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி மாளிகையில் மகிந்தவுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது நிழற்படங்களோ, ஒளிப்படங்களோ எடுக்க அனுமதிக்க வேண்டாம் என மன்மோகன் சிங் அதிகாரிகளுக்கு கட்டளை பிறப்பித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் குறித்து இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக முதல்வர் மு.கருணாநிதி மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்.

இரு தலைவர்களினது சந்திப்பின் போது சம்பிரதாய பூர்வமான படங்களை எடுக்க அனுமதிக்காதது, தமிழ் நாட்டின் கோரிக்கையை மத்திய அரசு கவனத்தில் கொண்டுள்ளது என்பதற்கும் அத்தாட்சி;

வழமையாக இரு தலை வர்களது சந்திப்பின் போது வெளியிடப்படும் கூட்டறிக்கையையும் இந்தச் சந்திப்பில் வெளியிடப்படவில்லை என சுட் டிக்காட்டப்பட்டிருந்தது. (எ-1)

# திருகோணமலையில் பெண் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலை பாலையூற்றுப் பிரதேசத்தில் பெண் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் குறித்த பெண்ணின் வீட்டுக்குச் சென்ற அடையாளம் தெரியாத ஆயுததாரிகள் அவரை சுட்டுகொன்றுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக திருகோணமலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்டவர் அந்தோனி வீதியைச் சேர்ந்த பாக்கியநாதன் கலிஸரா நிர்மலா (வயது 42) என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ச-7)

# அராலிப் பகுதியில் நாய்கள் தொல்லை

(பொன்னாலை)

அராலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் பெரிதும் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீதிகள்,சந்தை ,வைத்தியசாலை போன்ற இடங்களில் இந்நாய்களின் நடமாட்டம் பெரிய அளவில் அதிகரித்துக் காணப்படுவதாகவும் -இதனால் அவ்விடங்களில் கூடும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ச-49)

# யுத்தநிறுத்த உடன்படிக்கையிலிருந்து ஒருவாரத்துக்குள் அரசு விலக வேண்டும்

## தவறினால் நாடளாவிய ரீதியில் போராட்டம்–ஜே.வி.பி.

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து அரசாங்கம் இவ்வாரத்திற்குள் உத்தியோக பூர்வமாக விலகவேண்டும்.

அத்துடன் புலிகளை உடனடியாக தடை செய்து அடியோடு ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் எதிர்காலத்தில் அரசாங்கமும் நாடும் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்படும் என்று ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினரும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளருமான விமல் வீரவன்ச எச்சரிக்கை விடுத்தார்.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது இராணுவத் தலைமையகத்தினுள் வைத்து தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டபோதே அரசாங்கம் புலிகள் மீது தடை விதித்திருக்க வேண்டும். ஆனால் அச்சந்தர்ப்பத்தை அரசாங்கம் தவற விட்டு விட்டது.

பயங்கரவாத அமைப்பாகக்கூறி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இன்னுமொரு வாரகாலத்திற்குள் புலிகளை தடைசெய்யா விட்டால் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் நிப்பொன் ஹோட்டலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்; இராணுவத் தளபதி மீது தாக்குதல் நடத்தப்பட்ட போதே அரசாங்கம் புலிகளைத் தடை செய்து யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகியிருக்க வேண்டும்.

ஆனால் சர்வதேசத்திற்கு அஞ்சி சந்தர்ப்பத்தை அரசாங்கம் தவறவிட்டுவிட்டது. அரசாங்கம் ஒரு புறம் பதில் தாக்குதலை நடத்திக் கொண்டு மறுபுறம் சமாதான பேச்சு வார்த்தையை முன்னெடுக்கிறது.

புலிகளை கைதுசெய்வதாகக் கூறிக் கொண்டு அவசரகாலச் சட்டத்தை கொண்டு வருகிறபோதெல்லாம் அதற்கு நாம் ஆதரவு வழங்கி வருகிறோம்.

புலிகளைத் தடைசெய்துள்ள வெளிநாடுகளைச் சேர்ந்துள்ள பிரதிநிதிகளை அரசாங்கம் கிளிநொச்சிக்கு அனுப்புகிறது. இவ்வாறான பரஸ்பர விரோதமான செயற்பாடுகளினால் புலிகளே பயன்பெறுகின்றனர்.

சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட கால கட்டத்தில் புலிகள் வரப்பிரசாதங்களை பெற்றுக்கொண்டுள்ளனர். என்றால் அரசாங்கத்திற்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள் தான் என்ன?

அரசாங்கம் படைகளை இழந்ததுடன் முக்கியஸ்தர்கள் மீது இலக்குவைத்ததே ஆகும். இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறாத வகையில் பார்த்துக்கொள்ள வேண்டுமாயின் புலிகள் மீது உடனடியாக தடை விதிக்க வேண்டும்.

இன்னும் ஒரு வார காலத்திற்குள் உத்தியோக பூர்வமாக விலகுவதாக அரசாங்கம் அறிவிக்க வில்லையாயின் இவ்வாரம் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்திவிட்டு அடுத்த வாரம் முதல் நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார். (ஒ)

## யாழில் தேங்காயெண்ணை இன்மையால் கார்த்திகைத் தீபம் ஏற்ற முடியாத அவல நிலை

(யாழ்ப்பாணம்)

தேங்காயெண்ணை இன்மையால் கார்த்திகைத் தீபம் ஏற்ற முடியாத நிலையில் யாழ். மக்கள் உள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் சமையலுக்கு பயன்படுத்தும் எண்ணெய் வகைகளுக்கு பலத்த தட்டுபாடு ஏற்பட்டிருப்பதோடு பல மடங்கு விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது. எண்ணெய் வகைகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் திருக்கார்த்திகை தீபத்திருநாளை உரிய முறையில் அனுஷ்டிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். யாழ்.மாவட்டத்தில் தேங்காயெண்ணை, நல்லெண்ணெய் , மரக்கறி எண்ணெய் வகைகளும் சூரியகாந்தி எண்ணெய் போன்ற சமையலுக்கு பயன்படுத்தும் சகல எண்ணெய் வகைகளும் லீற்றர் 1000 ரூபாவுக்கு மேற்பட்ட விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றன.

சமையலுக்கு பயன்படுத்தும் எண்ணெய் வகைகளுக்கு பலமடங்கு விலை அதிகரித்துள்ள அதேவேளை தரமான பொருளையோ, கலப்படமில்லாத பொருளையோ எல்லா இடங்களிலும் விரும்பிய விதத்தில் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சமையல் எண்ணெய் வகைகளை அதிகரித்த விலையில் என்றாலும் கூட வாங்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதால் கார்த்திகை விளக்கீட்டிற்கு தீபம் ஏற்ற முடியாத அவல நிலை ஏற்பட்டிருப்பதாக மக்கள் கவலை கொண்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் கார்த்திகை விளக்கீட்டிற்கு பெருமளவில் தீபம் ஏற்றுவதும், காலமாகிய தமது உறவினர்களை நினைவுகூர்ந்து பெரியளவில் சமையல் செய்தும் பலகார வகைகளை தயாரித்தும் பிதிர்களுக்கு படைத்து தமது பிதிர்க்கடன்களை நிறைவேற்றுவது இந்து மக்களின்வழக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## வவுனியா தனியார் பஸ்கள் இரவில் வேறிடத்திலிருந்து சேவை

வவுனியாவில் நிலவுகின்ற நெருக்கடி மிக்க பாதுகாப்பு நிலைமைகளை காரணம் காட்டி வவுனியா தனியார் பஸ் வண்டிகள் தமது இரவு நேர சேவைகளை நகருக்கு வெளியே ஈரப்பெரியகுளத்தில் இருந்து மேற் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா அனுராதபுரம் வீதியில் நகரிலிருந்து சுமார் 2கிலோ மீற்றர் தொலை வுக்கு அப்பால் நகர எல்லையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்திலிருந்தே தனியார் பஸ் வண்டிகள் தமது இரவு சேவைகளை நடத்தி வருகின்றன.

இதனால் வவுனியாவிலிருந்து அனுராதபுரம் மற்றும் நாட்டின் முக்கிய பிரதேசங்களான கொழும்பு, கண்டி போன்ற தென் பகுதி நகரங்களுக்குப் பிரயாணம் செய்பவர்கள் நகரிலிருந்து 2கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஈரப் பெரியகுளம் எரிபொருள் நிலையத்திற்குச் சென்றே பஸ் வண்டிகளில் ஏற வேண்டியுள்ளது. (ச)

## தீவுப்பகுதி கடற் பகுதியில் கடற்படையின் பாரிய ஒத்திகை

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதி மீதான மீண்டுமொரு தாக்குதல்கள் நடவடிக்கையை எதிர்பார்த்து கடற்படை பெருமெடுப்பிலான ஒத்திகை நடவடிக்கைகளை கடந்த சில தினங்களாக மேற்கொண்டு வருகின்றது. குறிப்பாக ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் கடற்படை தளங்களிலேயே இவ்வாறான ஒத்திகைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடல் வழியான தரையிறக்க முனைப்புகளை எதிர்கொள்ளும் வகையிலேயே இவ் ஒத்திகைகளில் பெருமளவிலான கடற்படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதி விடுதலைப்புலிகளது தாக்குதலிற்குள்ளான மண்டைதீவு படைத்தளம் பெரும் சேதங்களை சந்தித்திருந்தது. எனினும் அக்கடற்படைத் தளம் முன்னைய நிலைக்கு கடற்படையினரால் மீளக்கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இத்தகையதோர் பின்னணியிலேயே மீண்டு மொரு தாக்குதல் இடம் பெறலாம் என்ற எதிர்பார்ப்பில் கடற்படை பெருமெடுப்பிலான ஒத்திகைகளை நடத்தி வருகின்றது. இந்நிலையில் ஊர்காவற்றுறை கடற்படைத் தளத்தில் கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற கடற்படையின் இவ்வாறான நடவடிக்கைகளின் போது பரவலாக தீர்க்கப்பட்ட வேட்டுக்களால் கரையோரப் பகுதி களில் உள்ள பொதுமக்களினது குடியிருப்புக்களின் கூரைகள் யாவும் சேதமடைந்தன.

பெண்ணொருவரும் படுகாயமடைந்துள்ளார். மூகாம் வீதியைச் சேர்ந்தவரான யோகன் திருவருட் செல்வி (வயது–31) காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ–1)

### கஜுவத்தை...

இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தையடுத்து விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை இலக்கு வைத்து படையினரும் பதிலுக்கு மோட்டார் மற்றும் எறிகணை தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இருப்பினும் தாக்குதல் நடாத்தப்படுவதாக படையினரால் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை விடுதலைப் புலிகள் மறுத்துள்ளனர். (ச–5)

### புதிய...

தொடர்பாக கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இப்புதிய அவசரகாலச் சட்டத்தில் முன்னைய சட்டத்துடன் சில விதிகள் இணைக்கப்படக்கூடும் என தெரிவிக்கப்பட்டது. (ச)

### புலிகளுடன் தொடர்பு கொள்ள...

இது தொடர்பாக அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹன்ன தெரிவித்துள்ளதாவது;

நோர்வே விஷேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் அரச உயர் மட்டத்தினருடன் நடாத்திய கலந்துரையாடலின் தொடர்பாக தற்போது கருத்து தெரிவிக்க முடியாத நிலையில் நானிருக்கின்றேன்.

ஆனால் என்னால் ஒன்றைக் கூறமுடியும். அதாவது எங்களது சமாதான செயலகம் நோர்வேயின் தூதுவரை அரசின் சார்பில் ஒரு தகவலைத் தெரிவிப்பதற்காகவே அழைத்திருந்தது. அவருடன் நோர்வேயின் விஷேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயரும் கலந்து கொண்டார்.

அந்தச் செய்தியானது விடுதலைப்புலிகளுடனான எந்தவொரு தொடர்பையும் தற்போதைய நிலையில் இலங்கை அரசு அனுமதிக்காது என்பது தான். அதில் நாளை பௌயரின் கிளிநொச்சி விஜயமும் அடங்குகின்றது.

மிகவும் உயர்ந்தளவில் நிலைமைகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. இது குறித்தமுடிபு எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்படும்.

நோர்வேயின் விஷேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் விடுதலைப் புலிகளை சந்திக்க நாளை கிளிநொச்சி செல்ல மாட்டார் என்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை எமது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதலை அனைவரும் அறிவார்

இந்நிலையில் எந்தவொரு பொறுப்பான அரசும் இது போன்ற விடயங்கள் குறித்து கண்களை மூடிக்கொண்டு தனது செயற்பாட்டினை எப்படித் தொடர முடியும் என கேள்வி எழுப்பினார்.

பலவிதமான நடவடிக்கைகள் குறித்து அரசு தற்போது ஆராய்ந்து வருகின்றது. இந் நடவடிக்கைகள் குறித்த விபரமான தகவல்கள் புதன்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவை மாநாட்டின் பின்னர் வெளியாகும். அதில் விடுதலைப்புலிகளை தடைசெய்வது குறித்தும் தெரிவிக்கப்படும் என்றார்.

அவ்வாறு புதன்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மீது தடை விதிக்க முடிபு எடுக்கப்படுமாயின் அது சமாதான முயற்சிகளை பாதிக்காதா எனக் கேட்டபோது;

தற்போது அரசாங்கத் தலைவர்கள் மீது எண்ணிலடங்காத தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இதில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் மீது நடத்தப்பட்ட தாக்குதலும் அடங்கும் அதற்கு முன்னரும் இது போன்ற தொடர்ச்சியான முயற்சிகள் நடத்தப்பட்டன.

எனவே ஜனநாயக்க முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு, இது போன்ற நிகழ்வுகளின் போது பாராமுகமாக இருக்க முடியாது. விடுதலைப்புலிகளின் இவ்வகை யான அணுகுமுறை நடவடிக்கைகளை முற்றிலுமாக நிறுத்த எந்த மாதிரியான முடிபு எடுக்கப்படும் என்பது குறித்து புதன்கிழமை தெரியும். அரசு பலவகையான வழிவகைகள் குறித்து தற்போது ஆராய்ந்து வருகின்றது எனவும் சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித ஹோகன்ன மேலும் தெரிவித்தார். (ச–5)

### இலங்கைப்...

விட்டார் எனத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

சீரமைப்புப் பணிகளோ, துயர் நிவாரணப் பணிகளோ எதுவும் சீராக நடைபெறாத நாட்டுக்குப் பயணம் செய்வதில் அர்த்தமில்லை என அவர் இலங்கையைத் தவிர்த்து விட்டார் என செய்திகள் தெரிவித்தன. (ச–5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.